# கடலூர்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்ற நிகழ்ச்சியில்

## ஒரு இலட்சம் பேருக்கு மேல் கலந்துகொண்ட
## தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக மாநாடு!







**பெற்றோர்கள்தான் நமது முதல் ஆசிரியர்கள்!**
**ஆசிரியர்கள்தான் நமது இரண்டாவது பெற்றோர்!**
**#எங்கள் கல்வி எங்கள் உரிமை!**

– முதல்வர் மு.க.ஸ்டாலின் X பதிவு









முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.2.2025) கடலூர் மாவட்டம், திருப்பயரில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகம் நடத்திய "பெற்றோர்களைக் கொண்டாடுவோம் விழா மேடை அருகே, மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.2.2025) கடலூர் மாவட்டம், திருப்பயரில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகம் நடத்திய "பெற்றோர்களைக் கொண்டாடுவோம் விழாவில், தமிழ்நாடு பெற்றோர்–ஆசிரியர் கழகத்தின் "அப்பா எனும் செயலியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் விஷ்ணு பிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் இராதாகிருஷ்ணன், இராஜேந்திரன், அய்யப்பன், பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மாநில துணைத் தலைவர் பி.வி.பி. முத்துக்குமார், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி. சந்திரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், பள்ளிக் கல்வித் துறை இயக்குநர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.2.2025) கடலூர் மாவட்டம், திருப்பயரில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகம் நடத்திய "பெற்றோர்களைக் கொண்டாடுவோம் விழாவில், மழலையர்கள், மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுடன் பங்கேற்று, அவர்களுடன் உரையாடினார்.